# வேதாகமவியல் பாடம் - 1

பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தைகள் நிறைந்த ஒன்றாகும். வேதபுத்தகத்தின் ஆசிரியரும் ஆக்கியோனும் தேவனே. மனிதவர்க்கத்திற்கு தவன் கூறும் செய்தியை தேவன் தாமாகவும் தாம் தெரிந்துகொண்ட தாசர்கள் மூலமாகவும் எழுத்துவடிவில் கொடுக்கப்பட்டதே வேதபுத்தகமாகும்.

தேவன்தாமே மனுவர்க்கத்திற்கு கூறவேண்டிய செய்தியை தமது விரல்களினால் எழுதினாரென்று யாத். 31:16 வசனங்களில் அறியமுடிகிறது. மேலும் தமது பரிசுத்தவான்களைக் கொண்டும் எழுதும்படி கூறுவதை ஆபகூக் 2:2ல் வாசிக்கிறோம். தேவன் மனுவர்க்கத்திற்கு தெரியப்படுத்தும் செய்தியை புத்தகவடிவில் கொடுக்க தேவன் உபயோகப்படுத்திய முதல் மனிதன் மோசே ஆவார். உபாகமம் 31:24.

தீர்க்கதரிசனமானது ஒருக்காலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2 பேதுரு 1:21) வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2 தீமோ. 2:16) என்றுவேதம் மிகத் தெளிவாய் கூறுகிறது. மனிதன் தேவனுடைய சித்தத்தை செய்து நிறைவேற்றவேண்டும் என்பதே வேதாகமத்தின் நோக்கமாகும்.

## வேதாகமம்- THE BIBLE

**வேதாகமம்**, பரிசுத்தவேதாகமம், சத்தியவேதாகமம், விவிலியம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

### BIBILIA

வேதாகமத்தின் கிரேக்கப்பதம் Bibilia (or) Biblos. இதன்பொருள் புத்தகங்களுக்கு எல்லாம் புத்தகம் என்பதாகும். Bible என்ற ஆங்கில பதம் Bibilia என்ற கிரேக்க பதத்திலிருந்து தோன்றியது.

### பரிசுத்தவேதாகமம் (HOLY BIBLE)

பைபிள் **(BIBLE)** என்னும் ஆங்கில வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். **பாப்பிரஸ் (PAPYRUS)** என்னும் நாணல் செடியிலிருந்து, அதன் மேல்பட்டையாகிய **பிபிலோஸ் (BIBLOS)** என்று அழைக்கப்படும் தோலை உரித்து, பல இரசாயண மாற்றங்களுக்குட்படுத்தி, அதைபதப்படுத்தி தோல்

போலாக்கி, எழுதிபத்திரப்படுத்தி, பின்வரும் சந்ததியறிய பாதுகாத்து வைத்தார்கள். அதில் பெரும் பகுதி இடம் பெற்றது நமது வேதாகமம். இந்த உலகிலேயே ஒரே புத்தகம் (THE BOOK) என்று அழைக்கப்படுவதற்கு தகுதியும், அந்தஸ்தும் உடையது நமது வேதாகமம் ஒன்றே! இதில் 66 புத்தகங்கள் இருந்தாலும், கி.பி. 13ம் நூற்றாண்டில் புத்தகங்கள் என்று பன்மையிலிருந்த பிபிலியா (BIBLIA) என்னும் கிரேக்க வார்த்தையை, இலத்தீன் வேதப்பண்டிதர்கள் ஒரேபுத்தகம் என அழைத்தார்கள். அதுவே **பிபிலோஸ்** என்பதாகும். **பாப்பிரஸ்** என்னும் பெயரிலிருந்து **பேப்பர்** என்பதும், **பிபிலோஸ்** என்பதிலிருந்து **பைபிள்** என்பதும் வந்தது.

## பரிசுத்த வேதாகமத்தின் எழுத்தாக்கம்

பரிசுத்த வேதாகமத்தை குறைந்தது 40 ஆசிரியர்கள், சுமாராக 1600 ஆண்டுகளுக்கும் மேலாக எழுதப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இதிலுள்ள புத்தகங்கள் எழுதப்பட்ட காலம் சுமார் கி.மு. 1500 ஆண்டு முதல் கி.பி. 100ம் ஆண்டு வரையிலும் இருப்பதாக கணக்கிடப்படுகிறது.

வேதாகமம் ஒரேபுத்தகமாக இருந்தாலும், இது 66 சிறுபுத்தகங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகிறது.

### பரிசுத்தவேதாகமம் இரு பகுதிகளைக் கொண்டது.

1. பழையஏற்பாடு (Old Testament)
2. புதியஏற்பாடு (New Testament)

ஏற்பாடு என்பதன் பொருள் உயில் அல்லது உரிமைபத்திரம் அல்லது உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்பதாகும்.

## பழையஏற்பாடு

பழைய ஏற்பாடு– 39 புத்தகங்களைகொண்டது. இதனை 5 பாகங்களாகப் பிரிக்கலாம்.

**I.**ஆகமங்கள் 5 (பஞ்சாகமங்கள்) Pentateuch

1. ஆதியாகமம் 2. யாத்திராகமம் 3. லேவியராகமம் 4.எண்ணாகமம்
5. உபாகமம்

**II.**சரித்திரபுத்தகங்கள் (12 Historial Books)

யோசுவாமுதல் எஸ்தர் வரை.

1. யோசுவா 2. நியாயாதிபதிகள் 3. ரூத் 4. 1 சாமுவேல் 5.2 சாமுவேல் 6. 1 இராஜாக்கள் 7. 2 இராஜாக்கள் 8. 1 நாளாகமம் 9. 2 நாளாகமம் 10. எஸ்ரா 11. நெகேமியா 12. எஸ்தர்

**III**. பாடல் புத்தகங்கள் (5 Poetical Books)

யோபுமுதல் உன்னதபாட்டுமுடிய.

1. யோபு 2. சங்கீதம் 3. நீதிமொழிகள் 4. பிரசங்கி

5. உன்னதப்பாட்டு

**IV**. பெரியதீர்க்கதரிசனபுத்தகங்கள் (5 Major Prophetical Books)

ஏசாயாமுதல் தானியேல் முடிய.

1. ஏசாயா 2. எரேமியா 3. புலம்பல் 4. எசேக்கியேல்

5. தானியேல்

**V**. சிறியதீர்க்கதரிசன புத்தகங்கள் (12 Minor Prophetical Books)

ஓசியாமுதல் மல்கியாமுடிய.

1. ஓசியா 2. யோவேல் 3.ஆமோஸ் 4.ஒபதியா 5. யோனா

6. மீகா 7. நாகூம் 8. ஆபகூக் 9.செப்பனியா 10. ஆகாய்

11. சகரியா 12. மல்கியா

## புதியஏற்பாடு

புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்கள் உள்ளன. இதை 5 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. சுவிசேஷங்கள் (4 Gospels)

மத்தேயுமுதல் யோவான் வரை.

1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

1. சரித்திரபுத்தகம் (1 Historical Book)

அப்போஸ்தலர் நடபடிகள்.

2. பவுலின் நிருபங்கள் (13 + 1 Pauline Epistles)

ரோமர் முதல் பிலேமோன் +எபிரேயர் வரை.

1. ரோமர் 2. 1 கொரிந்தியர் 3. 2 கொரிந்தியர் 4. கலாத்தியர்

5. எபேசியர் 6. பிலிப்பியர் 7. கொலோசெயர்

8. 1 தெசலோனிக்கேயர் 9. 2 தெசலோனிக்கேயர் 10. 1 தீமோத்தேயு

11. 2 தீமோத்தேயு 12. தீத்து 13. பிலேமோன் 14 எபிரெயர்

3. பொதுவான நிருபங்கள் (7 General Epistles)

யாக்கோபுமுதல் யூதாவரை.

1. யாக்கோபு 2. 1 பேதுரு 3.2 பேதுரு 4. 1 யோவான்

5. 2 யோவான் 6. 3 யோவான் 7.யூதா

4. தீர்க்கதரிசனபுத்தகம் (1 Prophetical Book) வெளிப்படுத்தினவிசேஷம்.

## வேதாகமம் - சிலபுள்ளிவிபரங்கள்

வேதாகமம் மொத்தம் 66 புத்தகங்களைகொண்டது.

பழையஏற்பாடு – 39 புத்தகங்கள் எபிரெயமொழியில் எழுதப்பட்டது.

புதியஏற்பாடு – 27 புத்தகங்கள் கிரேக்கமொழியில் எழுதப்பட்டது.

பழையஏற்பாடு – 929 அதிகாரங்கள் உள்ளது.

புதியஏற்பாடு – 260 அதிகாரங்கள் உள்ளது.

வேதாகமம் - 1189 அதிகாரங்கள் கொண்டது.

பழையஏற்பாடு – 23, 314 வசனங்கள் அடங்கியுள்ளது.

புதியஏற்பாடு – 7, 959 வசனங்கள் அடங்கியுள்ளது.

**வேதாகமத்தில் உள்ளபெரியவசனம் - தானியேல் 5:23**

“பெருமையுள்ளவனுக்கு தேவன் எதிர்த்துநிற்கிறார்”….

**சிறியவசனம் - யோபு 36:1**

வேதாகமத்தில் அர்த்த புஷ்டியுள்ள சிறியவசனம்

இயேசுகண்ணீர் விட்டார் - யோவான் 11:35

ஜீவஅப்பம் நானே – யோவான் 6:48.

வேதாகமத்தின் மத்தியவசனம் சங்கீதம் 118:8

“மனுஷனை நம்புவதைபார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்”.

**வேதாகமத்தின் சிற்றுருஅல்லது சிறியவேதாகமம்**

ஏசாயா ஒருதீர்க்கதரிசன புத்தகம்.

ஏசாயா – 66 அதிகாரங்களைக் கொண்டது. (வேதாகமத்தில் 66 புத்தகங்கள்) ஏசாயா இருபகுதிகள் கொண்டது.

ஏசாயா 1 முதல் 39 அதிகாரங்கள் - பாவத்தினால் ஏற்படும் நியாயத் தீர்ப்பைக் குறித்துசெய்திகள் அடங்கியுள்ளது.

40 முதல் 66 அதிகாரங்கள் - இந்த 27 அதிகாரங்களும் தேவனுடைய இரக்கம்,மீட்பு இவற்றின் செய்திகளை கூறுகிறது. வேதாகமத்தை போன்று ஏசாயா புத்தகமும் - இரு பகுதிகளை கொண்ட 66 அதிகாரங்களாகும். ஆகவே ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வேதாகமத்தின் சிற்றுரு என அழைக்கிறோம்.

## புதியஏற்பாடு:

355 பக்கங்களை கொண்ட இப்புத்தகத்தை வாசிப்பதற்கு ஓர் வழிகாட்டி.

ஒருபக்கத்தை வாய்விட்டு வாசிக்க நான்கு நிமிடங்கள் ஆகிறது. அதே வேகத்தில் வாசித்தால் 24 மணிநேரத்தில் (1 நாள்) புதியஏற்பாடு முழுவதையும் வாசித்து முடிக்கலாம். 1 நாளைக்கு 20 நிமிடங்கள் வாசித்தால் 6 வாரங்களில் (6 x 7 = 42 days) வாசித்து முடிக்கலாம்.

புதிய ஏற்பாட்டிலுள்ள 27 புத்தகங்களில் 17 புத்தகங்கள், 6 அதிகாரங்கள் அல்லது அதற்கு குறைவான அதிகாரங்கள் கொண்டது. ஆகவே சிறியபுத்தகங்களை முழுமையாக வாசிப்பது அதிக பயனைதரும்.

புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களையும் எழுதுவதற்கு தேவன் 8 வித்தியாசமான பாத்திரங்களை பயன்படுத்தினார்.

1. மத்தேயு – 1 புத்தகம்
2. மாற்கு – 1 புத்தகம்
3. லூக்கா – 2 புத்தகங்கள்
4. யோவான் - 5 புத்தகங்கள்
5. பவுல் - 14 புத்தகங்கள்
6. பேதுரு – 2 புத்தகங்கள்
7. யாக்கோபு – 1 புத்தகம்
8. யூதா – 1 புத்தகம்

8 ஆசிரியர்களும் 27 புத்தகங்களை எழுத 50 வருடகால இடைவெளி இருந்தது.

## நிருபங்கள் (EPISTLES)

### நிருபங்களின் பிரிவுகள்

மொத்தநிருபங்கள் - 21

பவுலின் நிருபங்கள் - 14

பொதுவானநிருபங்கள் - 7

சபையின் நிருபங்கள் - 9

தனிப்பட்டநிருபங்கள் - 4

1. **சபைகளுக்கு எழுதப்பட்டநிருபங்கள் - 9**

ரோமர் முதல் 2 தெசலோனிக்கேயர் வரை இவைகள் சபைகளுக்கு எழுதப்பட்டநிருபங்கள்.

2. **போதகர்களுக்கு எழுதப்பட்டநிருபங்கள் - 3**

1 தீமோத்தேயு. 2 தீமோத்தேயு. 3. தீத்து

3. **நண்பனுக்குஎழுதப்பட்டநிருபம் - 1**

பிலேமோன்

**அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபங்களை 4 வகையாக பிரிக்கலாம்.**

1. ஊழியத்தின் ஆரம்பத்தில் எழுதியது.
2. ஊழியத்தின் மத்தியபாகத்தில் எழுதியது.
3. ஊழியத்தின் இடைப்பட்டகாலத்தில் எழுதியது.
4. ஊழியத்தின் இறுதிகாலத்தில் எழுதியது.

1. **அதிகாலைநிருபங்கள்:**

1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர்.

2. **மத்தியானநிருபங்கள்:**
    1. ரோமர்
    2. 1 கொரிந்தியர்
    3. 2 கொரிந்தியர்
    4. கலாத்தியர்

3. **சாயங்காலநிருபங்கள்**
    1. எபேசியர்

2. பிலிப்பியர்
3. கொலோசேயர்
4. பிலேமோன்

**சபையின் நிருபங்களை 3 வகையாகபிரிக்கலாம்.**

1. ரோமர் - ஜென்மசுபாவம் உள்ளவர்களுக்கு எழுதப்பட்டது. (யூதர்களுக்கு) (1 கொரிந்தியர் 2:14)
2. 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர்,கலாத்தியர் - மாம்சத்துக்குரியவர்களுக்கு எழுதப்பட்டது. (1 கொரி.3:1 முதல் 3).

**மாம்சத்துக்குரியவர்கள்:**

1. விசுவாசத்தில் குழந்தைகள்
2. பொறாமைஉள்ளவர்கள்
3. பெலனில்லாதவர்கள்
4. வாக்குவாதம் பண்ணுகிறவர்கள்
5. பேதங்கள் நிறைந்தவர்கள்.

3. எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர் இவை ஆவிக்குரியவர்களுக்கு எழுதப்பட்டது (1 கொரி.2:15-16).

**நிருபங்களை எழுதியவர்களின் காரணப் பெயரும், நிருபங்களின் காரணப் பெயர்களும்.**

1. பவுல் - ரோமர் முதல் எபிரெயர் வரை விசுவாசத்தின் நிருபங்கள்.
   பவுல் - விசுவாசத்தின் அப்போஸ்தலன்.
2. யோவான் - அன்பின் நிருபங்கள் (1 யோவான், 2 யோவான், 3 யோவான் - அன்பின் அப்போஸ்தலன்
3. பேதுரு – நம்பிக்கையின் நிருபங்கள் (1பேதுரு, 2 பேதுரு)
   பேதுரு – நம்பிக்கையின் அப்போஸ்தலன்.
4. யாக்கோபு – கிரியையின் நிருபம், (ஒரேநிருபம்)

யாக்கோபு – கிரியையின் அப்போஸ்தலன்.

5. யூதா – துர் உபதேசங்களை எதிர்க்கிறநிருபம்,
   துர் உபதேசங்களை எதிர்க்கிற அப்போஸ்தலன்.

**கேள்விகள்:**

1. வேதாகமத்திற்கான மற்ற பெயர்களையும், அதற்கான விளக்கங்களையும் கூறுக.
2. வேதாகமத்தை பற்றி பலர் சொன்ன பலவிதமான கருத்துக்கள் என்னென்ன என்பதனை வரிசைப்படுத்திக் கூறுக.
3. ஏற்பாடு என்றால் என்ன? என்பதனை இப்பாடத்திலிருந்து கற்றுக்கொண்டதிலிருந்து எழுதுக.
4. வேதாகமத்தின் பிரிவுகள் மற்றும் அதனுடைய புள்ளி விவரங்களைப் பற்றி சற்று விளக்கமாக கூறுக.
5. நிருபங்களை எழுதியவர்களின் காரணப்பெயர்களையும், நிருபங்களின் காரணப்பெயர்களையும் சற்று விளக்கமாக கூறுக.